# KEY FACTS DOCUMENT

## வர்த்தகச் சேவைகள்

DFCC BANK
Keep Growing

| | |
|---|---|
| நன்மைகள் / சேவைகள | DFCC வங்கி வணிக மற்றும் தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் போன்ற இருதரப்பினருக்கும் விரிவான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மற்றும் நிதி தீர்வுகளைபெற்றுக் கொடுத்து சிறப்பான சர்வதேச மற்றும் உள்ளூர் வர்த்தக சேவைகளை வழங்குகிறது இறக்குமதி நிதி சேவைகளுக்கான கடனுக்கான கடிதங்களை வடிவமைத்தல், ஆவண சேகரிப்புகளை நிர்வகித்தல், வங்கி உத்தரவாதங்களை வழங்குதல், முன்பணம் அல்லது திறந்த கணக்கு கொடுப்பனவுகளைப் பேணுதல், கப்பல் சேவை உத்தரவாதங்களை வழங்குதல் மற்றும் இறக்குமதி கடன்கள் மூலம் நிதியுதவி வழங்குதல் ஆகியவை அடங்கும். வங்கியானது ஏற்றுமதிக்கு முந்தைய மற்றும் பிந்தைய நிதியுதவியுடன் வணிகங்களை ஆதரித்தல், ஏற்றுமதி தொடர்பான கடன் கடிதங்கள், கடன் கடிதங்களின் கீழ் ஆவணங்களை வாங்குதல் அல்லது பேச்சுவார்த்தை நடத்துதல் மற்றும் வசூல் பில்களைக் கையாளுதல் ஆகியவற்றில் ஏற்றுமதித் துறையில் ஆலோசனை வழங்குகிறது. |
| நன்மைகள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட சேவைகள் | அனைத்து பரிவர்த்தனைகளும் ஒரு மையப்படுத்தப்பட்ட செயல்பாட்டு தளத்திற்குள் நிபுணத்துவ சேவையை வழங்க உறுதிபூண்டுள்ள, மிகவும் அர்ப்பணிப்புள்ள, வாடிக்கையாளர்களை போன்றோரை மையமாகக் கொண்ட நிபுணர்கள் குழுவால் நிர்வகிக்கப்படுகின்றது. விர்வாகப் பரவலடைந்துள்ள நிருபர் வங்கி வலையமைப்பு மூலம் வர்த்தக பரிவர்த்தனைகளுக்கான தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகள் உள்ளன. பரந்த அளவிலான விரிவான அம்சங்களைக் கொண்ட தனித்துவமான காகிதங்களற்ற ஆன்லைன் தளத்தின் மூலம் வர்த்தக பரிவர்த்தனை கோரிக்கைகளை சமர்ப்பிக்கலாம். வர்த்தக நிதி தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு போட்டித்தன்மை வாய்ந்த கட்டணம் வழங்கப்படுகிறது. |
| விண்ணப்பிக்கும் முறை | அனைத்து வாடிக்கையாளர்களும் தலைமை அலுவலகத்திற்கு அல்லது அருகிலுள்ள கிளைக்கு வருகை தந்து நிர்வாகத்துடன் தங்கள் தேவைகள் குறித்து கலந்துரையாட அழைக்கப்படுகிறார்கள். கலந்துரையாடலுக்குப் பிறகு, DFCC வங்கியின் வர்த்தக சேவைகள் மற்றும் தயாரிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பங்களை வங்கி வாடிக்கையாளர்களுக்கு வழங்கும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் கிடைத்தவுடன், வாடிக்கையாளர்களுக்குத் தேவையான தயாரிப்பு அல்லது சேவையின் வகையைப் பொறுத்து அது வங்கியால் செயல்படுத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். |
| வேையான ஆவணங்கள் | ஆவணங்களை கிளை வலையமைப்பு மூலமாகவோ அல்லது வங்கியின் இணையத்தளத்தை அணுகுவதன் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். (https://www.dfcc.lk/application-downloads). |

DFCC BANK
Keep Growing

| | |
|---|---|
| கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் | வர்த்தக சேவைகள் மற்றும் தயாரிப்புகளுக்குப் பொருந்தக்கூடிய வட்டி மற்றும் கமிஷன் வீதங்களை ஒவ்வொரு வணிகப் பிரிவிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். அதே தகவல்கள் www.dfcc.lk என்ற எங்கள் இணையத்தளத்திலும் கிடைக்கின்றன.<br><br>சந்தை நிலவரங்களைப் பொறுத்து, எமது வட்டி மற்றும் கமிஷன் அவ்வப்போது திருத்தியமைக்கப்படும். வர்த்தக பரிவர்த்தனைகள் மீது ஒழுங்குமுறை அதிகாரிகளால் விதிக்கப்படும் எந்தவொரு கட்டணங்களும் அல்லது வட்டியும் இந்த அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி வசூலிக்கப்படும். இந்த கட்டணங்கள் வங்கியால் வெளியிடப்பட்ட அல்லது வழங்கப்படும் வட்டி, கட்டணங்கள் மற்றும் கமிஷன்களுக்கு லேதிகமானவை.. |
| விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் | இணக்கத்தை உறுதி செய்வதற்கும் செயல்பாட்டு அபாயத்தைக் குறைப்பதற்கும் சர்வதேச மற்றும் உள்ளூர் விதி முறைகளின் கட்டமைப்பிற்குள் வர்த்தக சேவைகள் செயல்படுகின்றன. நிலைத்தன்மை மற்றும் ஒழுங்குமுறை பின்பற்றலைப் பராமரிக்க, வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சலுகை கடிதங்கள், வங்கியின் உள்ளக மற்றும் தணிக்கைக் கட்டுப்பாடுகள், ICC வெளியீடுகள், நாட்டின் அந்நியச் செலாவணி விதிமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக பரிவர்த்தனைகளை நிர்வகிக்கும் உள்ளூர் மற்றும் சர்வதேச அதிகாரிகளால் வழங்கப்படும் வேறு ஏதேனும் உத்தரவுகள் அல்லது விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வர்த்தக சேவைகள் கடைபிடிக்கும். வாடிக்கையாளர்களால் கடன் வசதிகளை திருப்பிச் செலுத்துவதற்கு வசதியாக வங்கியானது அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். இந்த முயற்சிகளில், வங்கியின் ஒட்டுமொத்த உள்ளக கொள்கைக்குள் ஒவ்வொரு நிகழ்வுகளின் அடிப்படையில் வாடிக்கையாளர்களின் பணப்புழக்கத்திற்கு ஏற்றவாறு வசதிகளை மீள்திட்டமிடல் மற்றும் மீள் கட்டமைப்பு செய்தல் ஆகியவை உள்ளடக்கப்படலாம்.<br><br>வாடிக்கையாளர்களால் இதுவரை தீர்வு காண முடியாவிட்டால், நாட்டின் நடைமுறையில் உள்ள சட்டங்களின் விதிகள், மீள்பரிசீலனை மற்றும் நடுவர் மன்றம் போன்ற பிற தீர்வுகளின் கீழ் மீட்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்த வங்கி கட்டாயப்படுத்தப்படலாம். இது தொடர்பாக வங்கிக்கு ஏற்படும் அனைத்து சட்ட மற்றும் பிற செலவுகளையும் வாடிக்கையாளரே ஏற்க வேண்டும். இலங்கையின் பொருந்தக்கூடிய சட்டங்களின் கீழ் உள்ள விதிகளுக்கு உட்பட்டு, வாடிக்கையாளரும் வங்கியும் செய்யும் அனைத்து பரிவர்த்தனைகளிலும் வங்கி கடுமையான இரகசியத்தைக் கடைப்பிடிக்கும்.<br><br>எந்தவொரு பரிவர்த்தனை அல்லது முயற்சியெடுத்த பரிவர்த்தனையும் எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கை அல்லது எந்தவொரு குற்றச் செயலுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று சந்தேகிக்க வங்கிக்கு நியாயமான காரணங்கள் இருந்தால், செயல்பாட்டு சட்ட கட்டமைப்பின் விதிகளின் கீழ் வங்கி அத்தகைய பரிவர்த்தனையை நிதி புலனாய்வு பிரிவுக்கு தெரிவிக்க வேண்டும். |

DFCC BANK
Keep Growing

| | |
|---|---|
| **கணக்கு பரிவர்த்தனைகள் பற்றிய விளக்கங்கள் மற்றும் விசாரனை** | **தொடர்பு வழிகள்:**<br>24/7 துரித சேவை 0112 350000<br>மின்னஞ்சல்: care@dfccbank.com<br>DFCC வங்கியின் எந்தக் கிளையிலும் தேவையான ஒத்துழைப்பு கிடைக்கும்<br>பதில் நடவடிக்கை நேரம்: 24 மணித்தியாலங்களுக்குள்<br><br>**வர்த்தக சேவை அலகு**<br>**சஜித ஜயகொடி – உதவி. துணைத் தலைவர்**<br>தொடர்பு இலக்கம் - +94 112 371 462<br>**மனிஷா பர்னான்டோ - முகாமையாளர்**<br>தொடர்பு இலக்கம் - +94 112 126 800 (நுஒவ: 3346)<br>**பத்தும் டி சில்வா - ஜூனியர் நிர்வாக அதிகாரி**<br>தொடர்பு இலக்கம் - +94 112 371 371 (நுஒவ: 1543)<br>**சத்துரி கிரேஷி - முகாமையாளர்**<br>தொடர்பு இலக்கம் - +94 112 371 425 |
| **முறைப்பாடுகள் கையாளப்படும் நடைமுறை** | உங்களுடைய முறைப்பாடு 01 பணித்தினத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், 02 பணித்தினங்களுக்குள் செயல்படுத்தப்படும். சில பிரச்சனைகளுக்கு இதை விட நீண்ட காலம் எடுக்கக்கூடும். நியாயமான காலத்திற்குள் திருப்தியான பதில் ஏதும் உங்களுக்கு கிடைக்காவிட்டால், தயவு செய்து எம்மைத் தொடர்பு கொள்ளவும்.<br>**மின்னஞ்சல்:** care@dfccbank.com<br>**எமது அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்வதனூடாக:** 0112 350000<br><br>**நிதியியல் குறைகேள் அதிகாரி**<br>இல. 1, பெதெஸ்தா பிளேஸ், மிலாகிரிய, கொழும்பு 05<br>தொ.பே: (011) 2 595624<br>மின்னஞ்சல்: fosril@sltnet.lk<br>இணையத்தளம்: www.financialombudsman.lk<br>இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் நுகர்வோர் உறவுகள் திணைக்களம் https://www.cbsl.gov.lk/en/fcrd |